பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**13 11 2025 THURSDAY 12.40 PM**

ஆகாஷவாணி

## <u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மத்திய அமைச்சரவை முடிவுகள், உலகளாவிய போட்டித் தன்மையை உறுதி செய்து சுயசார்பை ஊக்குவிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** இந்தியா — சிலி இடையிலான பொருளாதார ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

**3.** தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக, ஜம்மு காஷ்மீர் காவல்துறையினர் 13 இடங்களில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

**4.** வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்டதன் 150-ஆவது ஆண்டு விழாவை, சிறப்பாக கொண்டாடுவதற்கு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

**5.** ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் -----

<<<<<>>>>>>

மத்திய அமைச்சரவை முடிவுகள் உலகளாவிய போட்டித் தன்மையை உறுதி செய்து சுயசார்பை ஊக்குவிக்கும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஏற்றுமதியாளர்களுக்கான கடன் உத்தரவாத திட்டத்திற்கு நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பது சிறு-குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு உதவிகரமாக அமையும் என்று குறிப்பிட்டுள்ளார்.

முக்கிய கனிமங்களுக்கான ராயல்டி தொகையை சீரமைக்கும் நடவடிக்கை இத்துறையில் நிலைத்தன்மையை ஏற்படுத்தும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் விநியோகச் சங்கிலியை வலுப்படுத்தி, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்க உதவிகரமாக இருக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

இந்தியா — சிலி இடையிலான பொருளாதார ஒத்துழைப்புகளை மேலும் வலுப்படுத்த இருநாடுகளும் உறுதிபூண்டுள்ளன.

வெளியுறவுத்துறையின் கிழக்கு நாடுகளுக்கான செயலாளர் திரு பி.குமரன் சாண்டியாகோவில், சிலி நாட்டின் சர்வதேச பொருளாதார விவகாரங்கள்துறை துணை அமைச்சர் திருமதி **Claudia Sanhueza-**வுடன் நடத்திய பேச்சுவார்த்தையில இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இருதரப்பு வர்த்தகத்தை விரிவுபடுத்துவதுடன், இருதரப்புக்கும் பயன் அளிக்க்கூடிய பொருளாதார ஒத்துழைப்புக்கான ஒப்பந்தங்கள் குறித்தும் இந்த சந்திப்பின்போது ஆலோசிக்கப்பட்டதாக சிலி நாட்டுக்கான இந்திய தூதரக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மருந்து தயாரிப்பு, பாரம்பரிய மருத்துவம் மற்றும் யோகா உள்ளிட்ட துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து திரு குமரன், சிலி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

குறிப்பாக, மருத்துவ அறிவியல் துறை சார்ந்த ஆராய்ச்சிகளில் கூட்டாக ஈடுபடவும் முடிவு செய்யப்பட்டதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

தில்லி கார் குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக, ஜம்மு காஷ்மீர் காவல்துறையினர் **13** இடங்களில் சோதனை மேற்கொண்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரின் புல்வாமா மாவட்டத்தை சேர்ந்த டாக்டர் முகமத் உமர், இச்சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்துள்ளதையடுத்து, ஜமாத் -ஏ — இஸ்லாமி இயக்கத்திற்கு தொடர்புடைய இடங்களில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனிடையே, கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் உயிரிழந்த டாக்டர் உமர் முகமதுதான் வெடிகுண்டுகள் நிரப்பிய காரை ஓட்டிவந்தவர் என்பது டிஎன்ஏ பரிசோதனையில் உறுதியாகியுள்ளதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், **Al Falah** பல்கலைக்கழகத்தில் உள்ள டாக்டர் உமர் முகமது மற்றும் டாக்டர் **Muzammil** ஆகியோரது அறைகளில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களில், தீவிரவாத சதித்திட்டம் குறித்த விவரங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் புலனாய்வு அமைப்புகள் தெரிவித்துள்ளன.

<<<<<>>>>>>

அல் கொய்தாவின் குஜராத் தீவிரவாத சதித்திட்டம் தொடர்பாக, தேசிய புலனாய்வு அமைப்பினர் ஐந்து மாநிலங்களில் சோதனை மேற்கொண்டனர்.

அல் கொய்தாவுடன் தொடர்புடைய பங்களாதேஷ் நாட்டை சேர்ந்த சிலர் போலியான இந்திய ஆவணங்களை தயாரித்து, சட்ட விரோதமாக ஊடுருவியது தொடர்பாக கடந்த 2023-ஆம் ஆண்டு பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குஜராத், ஹரியானா, மேற்குவங்கம், மேகாலயா, திரிபுரா ஆகிய ஐந்து மாநிலங்களில் நடத்தப்பட்ட இந்த சோதனையில் பல்வேறு முக்கிய ஆவணங்களும், டிஜிட்டல் சாதனங்களும் கைப்பற்றப்பட்டிருப்பதாக தேசிய புலனாய்வு முகமையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

வந்தே மாதரம் இயற்றப்பட்டதன் 150-ஆவது ஆண்டு விழாவை சிறப்பாக கொண்டாடுவதற்கு மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது.

நாடு முழுவதிலும், மாவட்டங்கள் தோறும் மத்திய அரசின் மக்கள் தொடர்பு அலுவலகத்தின் மூலம் பள்ளிகள் மற்றும் பொது இடங்களில் வந்தே மாதரம் பாடல் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கலாச்சார அமைச்சகமும் இந்த நிகழ்ச்சிகளில் இணைந்து, சுதந்திரப் போராட்டம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

டி டி நியூஸ் தொலைக்காட்சியில், வந்தே மாதரம் தொடர்பான 25 குறும்படங்கள் திரையிடப்பட உள்ளன.

இப்பாடலை இயற்றிய பன்கிம் சந்திர சாட்டர்ஜியின் வாழ்க்கை வரலாறு, சுதந்திரப் போராட்டத்தில் அவரது பங்களிப்பு குறித்த ஆவணப்படங்களும் ஒளிபரப்பப்படும்.

பத்திரிகை தகவல் அலுவலகத்தின் மூலம், இந்தி, தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுகு உள்ளிட்ட 11 மொழிகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன.

தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக, சமூக வலைதளங்களில், வந்தே மாதரம் தொடர்பான சிறப்பு பதிவுகள்

மேற்கொள்ளப்படும் என்றும் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கைக்கான ஏற்பாடுகள் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

**243** உறுப்பினர்களை கொண்ட பீகார் சட்டப்பேரவைக்கு கடந்த ஆறு மற்றும் **11**-ஆம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்றது.

இத்தேர்தலில் பதிவான வாக்குகள் அம்மாநிலத்தில் உள்ள **38** மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள **46** மையங்களில் நாளை எண்ணப்பட உள்ளன.

இதேபோன்று, தெலங்கானா, ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பல்வேறு சட்டப்பேரவைகளில் காலியாக உள்ள எட்டு இடங்களுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பதிவான வாக்கு எண்ணிக்கையும் நாளை மேற்கொள்ளப்பட உள்ளது.

<<<<<>>>>>>

மேற்குவங்க மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப்பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி, மாவட்ட தேர்தல் அதிகாரிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பணிகள் குறித்து காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்ட அவர், வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் உரிய காலக்கெடுவுக்கள் விநியோகிக்கப்பட்டதை உறுதி செய்யுமாறு அறிவுறுத்தினார்.

தமிழகத்திலும் இப்பணி முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திண்டுக்கல் மாவட்டத்திற்கு உட்பட்ட ஒட்டன்சத்திரம் பகுதியில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து, **Magic Show** மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Sound Byte — ராஜசேகரன் — 30 Sec. )***

*<<<<<>>>>>>*

அமெரிக்காவில் பல்வேறு துறைகளுக்கான நிதி ஒதுக்கீட்டில் நிலவி வந்த தேக்கநிலை முடிவுக்கு வந்துள்ளது.

அரசு நிதி ஒதுக்க மசோதாக்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைக்காததால், கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக விமான போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு சேவைகள் பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், இந்த மசோதாவிற்கு அந்நாட்டின் பிரதிநிதிகள் சபை நேற்று ஒப்புதல் அளித்ததையடுத்து, நிதி ஒதுக்க மசோதாவில் அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கையெழுத்திட்டதன் மூலம், ஊழியர்களுக்கான சம்பள பட்டுவாடா சீரடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

ஆப்பிரிக்க நாடான காங்கோவில் சுமார் **25** மில்லியன் மக்கள் போதிய உணவு கிடைக்காமல் தவித்து வருவதாக ஐ நா தெரிவித்துள்ளது.

ஐ நா தலைமையகத்தில் செய்தியாளர்களை சந்தித்த அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் திரு **Stephane Dujarric,** அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் **20** சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் உணவின்றி தவிப்பதாக கூறினார்.

இந்த எண்ணிக்கை அடுத்த ஆண்டு முற்பகுதியில் 27 மில்லியனை எட்டக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

காங்கோ நாட்டில் உள்ள பல்வேறு நகரங்களில் அப்பாவி மக்களை குறிவைத்து நடத்தப்படும் தாக்குதலில் இந்த ஆண்டு மட்டும் ஆயிரத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பது கவலை அளிக்கத்தக்கது என்றும் திரு **Stebhane Dujarric** தெரிவித்தார்.

<<<<<>>>>>>

கேரளா மற்றும் மாஹேயின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சட்டீஸ்கட், ராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேச மாநிலங்களில் குளிரின் தாக்கம் அதிகரிக்க்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் வடகிழக்கு பகுதியில் தட்ப வெப்ப நிலை இயல்பைவிட மூன்று டிகிரி செல்சியஸ் குறைய வாய்ப்புள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜம்மு காஷ்மீரில் கடும் குளிர் நிலவி வருகிறது.

ஸ்ரீநகரில் வெப்பநிலை மைனஸ் இரண்டு புள்ளி ஒரு டிகிரி செல்சியஸ்ஸாகவும், பஹல்காமில் மைனஸ் மூன்று புள்ளி எட்டு டிகிரி செல்சியஸ்ஸாகவும் பதிவாகியுள்ளது.

குல்மார்க் உள்ளிட்ட இடங்களிலும் கடும் குளிர் நிலவுவதால், முதியோர், குழந்தைகள் மற்றும் இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

ஆசிய வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா இரண்டு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளது.

டாக்காவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழு பிரிவில் தென்கொரியாவையும், கலப்பு குழு பிரிவில் பங்களாதேஷையும் வீழ்த்தி தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது.

ஆடவர் குழு பிரிவில் இந்தியா வெள்ளிப்பதக்கத்தை வென்றது.

---------------

இந்தியா ஏ — தென்னாப்பிரிக்கா ஏ அணிகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கெட் போட்டி, குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் இன்று நடைபெறுகிறது. இப்போட்டி பிற்பகல் மணி 1.30-க்கு தொடங்குகிறது.

<<<<<END>>>>>>